දුරකථන ) 2698475
தொலைபேசி ) 2698490
Telephone ) 2698507

ෆැක්ස් ) 2692913
பெக்ஸ் ) 2693869
Fax )

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதாரம் அமைச்சு
**Ministry of Health**

මගේ අංකය )
எனது இல ) Nccp/GosL/01/2021
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 18/01/2021
Date )

---

பொது சுற்றறிக்கை இலக்கம்: 01- 01/2021

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
சுகாதார மருத்துவ அதிகாரிகள்,
அனைவருக்கும்.

**உலக புற்றுநோய் தினம் - 2021 பெப்ரவரி 04**

புற்றுநோயானது தற்போது உலகம் முழுவதிலும் பாரிய பொது சுகாதார பிரச்சினை ஒன்றாக மாறியுள்ளதுடன், எதிர்காலத்தில் இந்நிலையானது மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டிலே உலகம் முழுவதிலும் 19.3 மில்லியன் புற்றுநோயாளர்கள் புதிதாக கண்டறியப்பட்டுள்ளதுடன் அதே காலப்பகுதியில் 10 மில்லியன் மக்கள் புற்றுநோய் காரணமாக உயிரிழந்துள்ளதாகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என கொளோபோகென் அறிக்கை 2020 (GLOBOCAN - 2020) தெரிவிக்கின்றது. இவ்வறிக்கையின் பிரகாரம் எதிர்வரும் 20 வருட காலப் பகுதியினுள் புதிதாக இனங்காணப்படக் கூடிய புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 28.5 மில்லியனைத் தாண்டும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. புற்று நோயினைப் பற்றிய விழிப்புணர்வினை அதிகரிக்கவும் மற்றும் நோய்ச் சுமையினை குறைப்பதற்காக செயன்முறைத்திட்டங்களை உருவாக்கவும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் கடந்த சில ஆண்டுக் காலப் பகுதிகள் முழுவதும் இலங்கையில் இடம்பெறுகின்ற மரணங்களில் புற்றுநோய் காரணமாக இடம்பெறுகின்ற மரணங்கள் இரண்டாம் இடம் வகிக்கின்றன. தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வெளியிடப்படுகின்ற புற்றுநோய் கண்காணிப்பு தரவு பற்றிய அறிக்கையின் பிரகாரம் இலங்கையினுள் 2014 ஆம் ஆண்டிலே புதிய புற்றுநோயாளர்கள் 23,105 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இது முறையே சனத்தொகையில் 100,000 பேருக்கான சராசரி விகிதம் 114.34 ஆகவும், வயது தரப்படுத்தப்பட்ட நிகழ்வு விகிதம் (Age Standardized Incidence Rate) 98.1 ஆகவும் காணப்படுகின்றது.

புற்றுநோய் காரணமாக ஒவ்வொரு நபரும் செல்வந்தர் வறியவர் என்ற பேதமின்றி ஏதாவது ஒரு விதத்தில் பாதிக்கப்படலாம். அவ்வாறே புற்றுநோய் காரணமாக தனிப்பட்ட ரீதியில், குடும்ப ரீதியில் மற்றும் சமூக ரீதியில் ஏற்படக் கூடிய மோசமான பெறுபேறுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கான ஆற்றல் அனைவரிடமும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் பெப்ரவரி 04 ஆம் திகதியை உலக புற்றுநோய் தினமாக பிரகடனப்படுத்தி அனைவரும் புற்றுநோய் பற்றி விசேட கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் நோக்கமாக அமைவது, தடுத்துக்கொள்ளக் கூடிய புற்றுநோய்கள் காரணமாக மரணிக்கின்ற மில்லியன் கணக்கான மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கு அரச மட்டத்திலும் அதே போன்று தனியார் மட்டத்திலும் செயற்பட்டு விழிப்பூட்டல் நிகழச்சித் திட்டங்கள் அடங்கலாக பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதாகும். 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான 3 வருட காலப் பகுதிக்குரிய உலக புற்றுநோய் தினத்தின் தொனிப்பொருளாக அமைவது "நான் செயற்படுகிறேன், இன்று போன்றே நாளையும்" என்பதாகும். உலக புற்றுநோய் தினம் 2021

---

385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரியபத்தேகமவிமலவங்சதேரோமாவத்தை,கொழும்பு 10.
385, Rev. BaddegamaWimalawansaTheroMawatha, Colombo 10, Sri Lanka.

நினைவுகூர்வதற்காக நேர்மறையான முறையிலும் மற்றும் திட்டமிட்டவாறும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதன் ஊடாக புற்றுநோயை வெற்றிகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். புற்றுநோயை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியமாக அமைவது,

- புற்றுநோய் காரணமாக அதிகமானோர் தமது வாழ் நாளிலே நேரடியாக அல்லது மறைமுகமாக பாதிப்புக்கு ஆளாகக் கூடியதாக இருப்பதனாலும்,
- சகல தனிநபர், அமைப்புகள் மற்றும் அரசாங்கம் போன்றவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் புற்றுநோய்ச் சுமையினை குறைப்பதற்கு உதவுவதுடன் 2025 ஆண்டு அளவில் தொற்றா நோய்கள் மூலம் ஏற்படும் முன்கூட்டிய மரணங்களில் 25% குறைப்பு என்ற இலக்கினை அடையவும் உதவும்
- உலகம் முழுவதிலும் நிகழுகின்ற மரணங்களுக்கு புற்றுநோயானது பிரதான காரணியொன்றாக அமைகின்ற போதிலும், அந்த மரணங்களில் 1/3 இனை தடுத்துக்கொள்ளக் கூடியதாக உள்ளமையாலும், முற்கூட்டியே கண்டறியப்பட்டால் அதிகமாக புற்றுநோய்களை முழுமையாக குணப்படுத்தக் கூடிய வாய்ப்பு உள்ளமையாலும்,
- புற்றுநோய் தொடர்பான அனைவரதும் அறிவினை அதிகரித்தல் மற்றும் புற்றுநோய் ஏற்படுவதற்கும் அதே போன்று சிகிச்சையளிப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் காலம் வரையில் உலகம் முழுவதிலும் வருடமொன்றிற்கு மில்லியன் கணக்கான மக்கள் அநாவசியமாக புற்றுநோய் காரணமாக மரணிப்பதனாலுமாகும்.

2021ம் ஆண்டுக்குரிய உலக புற்றுநோய் தினத்தைக் கொண்டாடும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் போது பின்வரும் குறிக்கோள்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. வாழ்க்கை முறை மற்றும் புற்றுநோய் இடையான தொடர்பு, ஆரோக்கியமான வாழ்க்கைத் தெரிவுகளை பின்பற்றுதல், புற்றுநோய்கள் தொடர்பான தவறான கருத்துக்கள் மற்றும் புற்று நோய்களில் 1/3 இனை தடுத்துக்கொள்ள முடியும் எனும் தகவல் போன்ற விடையங்களை உள்ளடக்கியதாக விழிப்புணர்வு செயற்திட்டங்களை சமூகத்திற்காக மேற்கொள்ளுதல்.

2. விரிவுரைகள் மற்றும் பணியிடைப் பயிற்சி திட்டங்களை சுகாதார ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள், தொழிற்சாலை ஊழியர்கள் போன்ற வேறு அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் அமைப்புகளின் ஊழியர்கள் இடையே நடாத்துதல். இவ் விரிவுரைகளின் போது முதன்மைத் தடுப்பு, முன்கூட்டிய கண்டறிதல், ஆரம்ப சுகாதார கட்டமைப்புகளில் புற்றுநோயாளர்களின் புனர்வாழ்வு மற்றும் நோய்த் தணிப்பு பேணல் போன்ற விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

3. வேலைத்தளங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் பரிசோதனை நடவடிக்கைகள் மற்றும் சுகாதார நற்தன்மைமிக்க உணவு வகைகள் தொடர்பாகவும், உடற்பயிற்சியின் அவசியம் பற்றியும் மேலும் புகை பிடித்தலின் மோசமான தாக்கங்கள் மற்றும் புற்றுநோயை ஏற்படுத்தும் ஏனைய ஆபத்தான காரணிகள் பற்றிய அறிய தேவையான கல்வி செயற்திட்டங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். எல்லா நிறுவனங்களும் ஆரோக்கியமான வாழ்க்கை செயற்பாடுகளை உருவாக்குவதற்கு முன்னுரிமை கொடுப்பதற்கு நிச்சயமாக ஊக்குவிக்க வேண்டும்.

4. புற்றுநோயின் நோய்த் தன்மைகள் மற்றும் அறிகுறிகள் மற்றும் சிகிச்சைகளை உரிய முறையில் பெற்றுக்கொள்வதன் ஊடாக புற்றுநோயாளர்கள் அதிக காலம் உயிர் வாழ்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பது பற்றி சமூகத்திற்கு விழிப்பூட்டல் நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் பயிற்சி செயற்பாடுகளில் கற்பித்தல் வேண்டும்

5. புற்றுநோயாளர்கள் மற்றும் அதில் இருந்து மீண்டவர்களிற்காக நிறுவனங்கள் மற்றும் சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட நோய்த் தணிப்பு பேணல் சேவைகளினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளினை மேற்கொள்ளுதல்.

*தற்போது நாட்டில் வியாபித்துள்ள கொவிட் 19 தீவிர நோய்ப்பரவலினை கருத்திற் கொள்ளும் போது தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய சுகாதார ஒழுங்குமுறைகள் மற்றும் சகல பாதுகாப்பு முன்னேற்பாடுகளும் சரியான முறையில் பேணப்படுதலினை உறுதிசெய்தல் முக்கியமானதாகும்.

உலக தொழுநோய் தினத்தை கொண்டாடுவதற்காக ஒழுங்கு செய்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் போது தேசிய தொழுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தினால் வெளியிட்டுள்ள பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் ஏனைய சுகாதாரக் கல்வி தொடர்பான கருவிகளை பயன்படுத்த முடியும். "2021 உலக தொழுநோய் தினம்" அனுசரிக்கப்படுவதற்கு அவசியமான விசேட நிகழ்ச்சித் திட்டங்களை பெப்ரவரி மாதத்தில் உங்களுக்கு வசதியான தினத்தில் செய்ய முடியும். மாவட்ட மட்டத்தில் மேற்கொள்கின்ற நிகழ்ச்சித் திட்டங்கள், மருத்துவ அதிகாரிகள் தொற்றாத நோய்கள், மருத்துவ அதிகாரிகள் தாய் சேய் சுகாதாரம் மற்றும் மாவட்ட பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் ஆகியோரினால் ஒருங்கிணைப்புச் செய்தல் வேண்டும். மேலும் நிலைக்களத் தலைவர்கள் சுகாதார மருத்துவ அதிகாரிகள் ஆகியோர் தமது நிறுவனத்தில் அதிகாரப் பிரதேசத்தில் உலக தொழுநோய் தினம் 2021 இனை நினைவுகூருவதற்காக ஆகக் குறைந்தது ஒரு விசேட நிகழ்ச்சித் திட்டத்தையேனும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அறியத் தருகின்றேன். இந்நிகழ்ச்சித் திட்டத்தை உரியவாறு பூர்த்தி செய்ததன் பின்னர் உலக தொழுநோய் தினத்தை நினைவுகூருவதற்காக விசேடமாக மேற்கொள்ளப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய சுருக்கமாக அறிக்கை ஒன்றினை தேசிய தொழுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறும் வேண்டிக்கொள்கின்றேன்.

2021 உலக தொழுநோய் ஒழிப்பு தினத்தை நினைவுகூருவதற்காக மேற்கொள்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் போது உங்களது தொழில்நுட்ப ரீதியான பங்களிப்பு மற்றும் வழிகாட்டல் வசதிகளை எதிர்பார்க்கின்றோம், அதனை பெரிதும் மதிக்கின்றேன். இந்த சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றி உங்களது நிறுவனத்தின் சம்பந்தப்பட்ட அனைத்து பதவியணியினருக்கும் அறிவுறுத்துமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படின் தேசிய தொழுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளருடன் தொலைபேசியில் 0112368627 எனும் இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ளவும் அல்லது மின்னஞ்சல் nccpsl@yahoo.com ஊடாக தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் அசேல குணவர்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
சுகாதார அமைச்சு

Dr. ASELA GUNAWARDENA
Director General of Health Services
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

பிரதிகள்
1. கௌரவ அமைச்சர், சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
2. கௌரவ பிரதி அமைச்சர், சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
3. சகல மாகாண சுகாதார அமைச்சர்கள்
4. செயலாளர், சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
5. மேலதிக செயலாளர் (பொது சுகாதாரம்)
6. சகல மாகாண சுகாதார செயலாளர்கள்
7. பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - மருத்துவ சேவைகள் I & II, பொது சுகாதாரம் I & II, திட்டமிடல் கல்வி பயிற்சி மற்றும் ஆய்வு, பல் சிகிச்சை சேவை- சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
8. பணிப்பாளர் - தேசிய தொழுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்
9. பணிப்பாளர் - குடும்ப சுகாதார பணியகம்
10. பணிப்பாளர் - தொற்றாத நோய்ப் பிரிவு
11. பணிப்பாளர் - சுகாதார மேம்பாட்டுப் பிரிவு
12. பணிப்பாளர் - ஆரம்ப சுகாதார சேவைகள்
13. பணிப்பாளர் - தனியார் சுகாதார துறை மேம்பாடு
14. பணிப்பாளர் - தேசிய சுகாதார கற்கை நிறுவகம்
15. பணிப்பாளர் - தோட்ட மற்றும் நகர சுகாதாரம்